# மெட்ரோ ரயில் பணி அமைச்சர் ஆய்வு

சென்னை, பிப்.11: சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்க பணிகளை தொழில்துறை அமைச்சர் சம்பத் நேற்று பார்வையிட்டார்

இது குறித்து மெட்ரோ ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்கத்தில் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட பணிகளை தொழில்துறை அமைச்சர் சம்பத் நேற்று பார்வையிட்டார். அப்போது அனைத்து பணிகளையும் குறித்த காலத்தில் விரைந்து முடிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். ஆயத்தப்பணிகளையும் முடித்து தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தினார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.